கரூர், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர் : திருமதி. கோ. வளர்மதி, B.Sc., (Agri.), M.B.A.,

எண் : அ2/ 1538/ 2019

நாள் :31.10.2019

பொருள்: பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப் பணி - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி-4ல் அடங்கிய பணிகள் - நேரடித்தேர்வு - 2015-16, 2016-17 மற்றும் 2017-18 ஆம் ஆண்டுகளில் தட்டச்சர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு பணியில் சேர்ந்தவர்களுக்கு பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை : 1. சென்னை வேளாண்மை கூடுதல் இயக்குநர் (பமே) அவர்களின் செயல்முறை ஆணை எண். அநிபி3/7551/2019 நாள்: 01.03.2019

2. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். அ2/1539/2019 நாள்: 05.03.2019

3. பணியாளர்கள் பணியில் சேர்ந்த அறிக்கைகள்

********

ஆணை :

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி-4ல் அடங்கிய பணிகள் நேரடித் தேர்வின் மூலம் 2015-16, 2016-17 மற்றும் 2017-18 ஆம் ஆண்டுகளில் தட்டச்சர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தெரிவாளுக்கு பணிநியமனம் வழங்கும் பொருட்டு பார்வை 1-இல் காணும் செயல்முறை ஆணையின்படி, இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பார்வை 2 -இல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி, தட்டச்சராக பணிநியமனம் செய்யப்பட்டு, பணியில் சேர்ந்துள்ள கீழ்காணும் பணியாளர்களுக்கு, பார்வை (1) -இல் காணும் சென்னை வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணையின் பத்தி (3) இல் வழங்கிய அறிவுரைகளின்படி தட்டச்சர் பதவியில் தனியாள் பணியில் சேர்ந்த நாள் முதல் பின்வரும் விவரப்படி பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| எண் | பெயர் / பதவி அலுவலகம் | தட்டச்சர் ஆக பணியில் சேர்ந்த நாள் | தட்டச்சர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | திருமதி. லோ. கீதா, தட்டச்சர், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், அரவக்குறிச்சி | 08.03.2019 முற்பகல் | 08.03.2019 முற்பகல் |
| 2 | திருமதி. செ. சாந்தி, தட்டச்சர், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம், கரூர். | 06.03.2019 முற்பகல் | 06.03.2019 முற்பகல் |
| 3 | திருமதி. சு. ரேவதி, தட்டச்சர், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், தோகைமலை. | 08.03.2019 முற்பகல் | 08.03.2019 முற்பகல் |
| 4 | திருமதி. மு. சரண்யா, தட்டச்சர், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், தரகம்பட்டி. | 08.03.2019 முற்பகல் | 08.03.2019 முற்பகல் |

| எண் | பெயர் / பதவி அலுவலகம் | தட்டச்சர் ஆக பணியில் சேர்ந்த நாள் | தட்டச்சர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 5 | திருமதி. க. சந்திர கலா, தட்டச்சர், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், தாந்தோணி. | 06.03.2019 முற்பகல் | 06.03.2019 முற்பகல் |
| 6 | திருமதி. க. கனகேஸ்வரி, தட்டச்சர், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம், கரூர் | 06.03.2019 முற்பகல் | 06.03.2019 முற்பகல் |
| 7 | செல்வி. ஆ. கீர்த்தனா, தட்டச்சர் வேளாண்மை துணை இயக்குநர் அலுவலகம், உழவர் பயிற்சி நிலையம், கரூர் | 08.03.2019 முற்பகல் | 08.03.2019 முற்பகல் |

வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண வணிகம்), நாமக்கல்.

2) மேற்கண்ட பணியாளர்களின் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து இவர்களை மூன்றாண்டு பணிக்காலத்தில் தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது.

3) மேற்கண்ட பணியாளர்கள் தொழில்நுட்ப கல்வித்துறையினரால் நடத்தப்படும் "CERTIFICATE COURSE IN COMPUTER ON OFFICE AUTOMATION" என்ற கணினித் தொழில்நுட்ப பயிற்சித் தேர்வினை தகுதிகாண் பருவ காலத்திற்குள் முடிக்க வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

4) மேலும், இப்பணிவரன்முறை ஆணை, சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி – 4 க்கான 2015-16, 2016-17 மற்றும் 2017-18 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பணிநியமன ஆணையினை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கின் இறுதி முடிவுக்கு உட்பட்டதாகும் எனவும் ஆணையிடப்படுகிறது.

வேளாண்மை இணை இயக்குநர்,
கரூர்.

31/10/19

பெறுநர்:
திருமதி. லோ. கீதா, தட்டச்சர், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், அரவக்குறிச்சி
திருமதி. செ. சாந்தி, தட்டச்சர், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம், கரூர்
திருமதி. சு. ரேவதி, தட்டச்சர், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், தோகைமலை
திருமதி. மு. சரண்யா, தட்டச்சர், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், தரகம்பட்டி
திருமதி. க. சந்திர கலா, தட்டச்சர், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், தாந்தோணி
திருமதி. க. கனகேஸ்வரி, தட்டச்சர், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம், கரூர்
செல்வி. ஆ. கீர்த்தனா, தட்டச்சர்,
வேளாண்மை துணை இயக்குநர் (உ.ப.நிலையம்) அலுவலகம், கரூர்

வழி : உரிய வழி முறையாக

நகல் : வேளாண்மை துணை இயக்குநர், உழவர் பயிற்சி நிலையம், கரூர்
நகல் : வேளாண்மை உதவி இயக்குநர், அரவக்குறிச்சி / தோகைமலை / தரகம்பட்டி / தாந்தோணி
நகல் : சம்பந்தப்பட்டவர்களின் பணிப்பதிவேடுகளுக்கு
நகல் : "அ2" பிரிவு இருப்புக்கோப்பு.